## மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2013

---

மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, நிதியங்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1981 இன் 66 ஆம் இலக்க மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவுடன் சேர்த்து சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக கொடுக்கல் வாங்கல்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 19 இல் நிதியத்தின் தலைவரிற்கு வழங்கப்பட்டது. நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000–1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் ஐந்தொகையை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள்

ஆரம்ப மூலதனமான ரூபா 373,500,000 தொகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் ஈடுபடுத்தப்பட்டு பணிப்பாளர் சபை பதவிவழியில் நியமிக்கப்பட்டு உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (எஸ்எல்ஐஐரீ) நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் துணைக் கம்பனிகளான நஷனல் வெல்த் கோப்பரேஷன் மற்றும் நெற்வெல்த் செக்கியூரிட்டீஸ் ஆகிய கம்பனிகளுடன் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2013 ஆம் ஆண்டிலிருந்து தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 50 சதவீத பங்குகளை உரித்தாகக் கொண்டிருந்த அபிவிருத்தி லொத்தர் சபையின் நிதிக்கூற்றுக்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கப்பட்டு தொகுதியின் கணக்குகள் தயாரிக்கப்படாதமை தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் எந்தவொரு வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி அறிக்கையிடலுக்கான கருத்துச் சட்டகத்தின் 4.56 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம், நிறுவனமொன்று அதன் நிதிக்கூற்றுக்களினை வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையில், அல்லது ஏதேனும் அடிப்படையில் தயாரிக்கவேண்டியதுடன், மற்றும் அந்த அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இருப்பினும், நம்பிக்கை நிதியம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த அடிப்படையினை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 07**

(i) நியமத்தின் 08 ஆம் பந்தியின் பிரகாரம், நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கீழ்கொண்டுசெல்லும் தொகை நிதி நிலைமைக்கூற்றில் அல்லது குறிப்புக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், நிதியம் அவ்வாறு செய்திருக்கவில்லை.

(ii) நியமத்தின் 31 மற்றும் 33 ஆம் பந்திகளின் பிரகாரம் ''நிதிசார் இடர்களின் முகாமைத்துவம்'' மீது நிதியத்தினால் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

(i) நியமத்தின் 10(ஈ) பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப் பாய்ச்சல் கூற்றினை நம்பிக்கை நிதியம் சமர்ப்பித்திருக்கவில்லை.

(ii) நியமத்தின் 38 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறைக் காலப்பகுதியின் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட அனைத்து தொகைகளுக்கான முன்னைய காலப்பகுதி தொடர்பில் ஒப்பீட்டு தகவலினை நிறுவனமொன்று வழங்கும். இருப்பினும், நிதியம் கணக்குகளுக்கான குறிப்புக்களில் ஒப்பீட்டு தகவலினை சமர்ப்பித்திருக்கவில்லை.

(iii) நியமத்தின் 57 ஆம் பந்தியின் பிரகாரம், திரண்ட நிதி மற்றும் தேறிய மிகைகள் நிறுவனத்தின் தன்மையின் பிரகாரம் நிதி நிலைமைக்கூற்றில் பொறுப்புக்களின் கீழ் காட்டப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அது நடைமுறையல்லாப் பொறுப்புக்களாக முறையற்றுக் காட்டப்பட்டிருந்தது.

(iv) நிதியத்திற்குச் சொந்தமான ரூபா 7,246,937,352 பெறுமதியுடைய சொத்துக்கள், நியமத்தின் 60 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்கள், மற்றும் நடைமுறைச் சொத்துக்களாக தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(v) நியமத்தின் பிரகாரம் 99 ஆம் பந்தியின் பிரகாரம், செயற்பாடுகளின் அடிப்படையில் மற்றும் நிறுவகத்தின் செலவினத்தின் தன்மையின் கீழ் வருமானம் மற்றும் செலவின கணக்கு தயாரிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அது அவ்வாறு செய்திருக்கவில்லை.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

நியமத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம், ஆதனம், பொறி மற்றும் உபகரணம் இனங்காணப்பட்ட நேரத்திலுள்ள கிரயத்தின் கீழ் கணக்கிடப்படுதவதற்குப் பதிலாக புத்தகப் பெறுமதிக்கு கணக்கிடப்பட்டிருந்தது.

**(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18**

நியமத்தின் 30(ஏ) ஆம் பந்தியின் பிரகாரம், வட்டி செயலூக்க விகிதத்தில் (effective rate) கணிப்பிடப்படல் வேண்டும், ஆனால் நம்பிக்கை நிதியம் அட்டுறு அடிப்படையில் வட்டியினைக் கணிப்பிடப்பட்டிருந்தது.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 24**

நியமத்தின் 25 மற்றும் 26 ஆம் பந்திகளின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினர்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். ஆனால், நம்பிக்கை நிதியம் அவ்வாறு செய்திருக்கவில்லை.

**(எ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39**

நெசனல் வெல்த் கோப்பரேசன் விமிட்டட்டினால் குறித்த கம்பனியால் முகாமை செய்யப்படுகின்ற முதலீட்டு கலவை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் காணப்பட்ட ரூபா 3,521,676,877 பெறுமதியான திறைசேரி முறிகள், ரூபா 49,012,292 தொகையான மீள்விற்பனைகள், ரூபா 200,000,000 பெறுமதியுடைய முன்னுரிமைப் பங்குகள், ரூபா 202,619,400 பெறுமதியுடைய தொகுதிக் கடன்கள், ரூபா 51,833,875 பெறுமதியுடைய சொத்து ஆதரிப்பு நம்பிக்கை தராதரப் பத்திரம் (Asset Back Trust Certificates) ரூபா 1,951,872,259 பெறுமதியுடைய நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபா 112,209,454 மீள்விற்பனைகள் வரவு மீதியென்றுடன் ரூபா 31,816 தொகையான நடைமுறைக் கணக்கிலுள்ள மீதி போன்ற வரவு மீதிகள் நியமத்தின் 45 ஆம் பந்தியின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டிருந்த பின்னர் நம்பிக்கை நிதியத்தின் நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த முதலீடுகளினை மதிப்பிடுவதற்கான அடிப்படைகூட நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 40**

நம்பிக்கை நிதியத்திற்கு சொந்தமான மாலபேயிலுள்ள 25 ஏக்கர் காணி 2005 ஆம் ஆண்டில் ரூபா 12,460,179 பெறுமதிக்கு கணக்கிடப்பட்டிருந்துடன் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு (SLIIT) குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டதுடன், நியமத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் ஆதனமொன்றாக கணக்குகளுக்கு தனியாக கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும், குறித்த ஆதனம் தற்போதைய பெறுமதிக்கு மதிப்பிடப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களில்கூட வெளிப்படுத்தப்படவில்லை.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவேண்டிய ரூபா 755,855 பெறுமதியான செலுத்தவேண்டிய பணிக்கொடை, நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 52,427,445 பெறுமதியுடைய பங்கிலாபங்கள் மற்றும் முன்னைய ஆண்டு சரிப்படுத்தல்கள் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் சரிப்படுத்தப்பட்டிருப்பதற்குப் பதிலாக வருமானம் மற்றும் செலவினக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) 2005 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையான காலப்பகுதி தொடர்பில் எஸ்எல்ஐஐரீ இடமிருந்து பெறவேண்டிய ரூபா 79,493,672 கூட்டுத்தொகையான குத்தகை வாடகைகள், நம்பிக்கை நிதியத்தினால் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர்கூட நம்பிக்கை நிதியத்தின் துணைக்கம்பனியொன்றினால் ரூபா 100,000,000 பெறுமதியுடைய மிகையூதிய பங்குகள் விநியோகிக்கப்பட்டதுடன், நம்பிக்கை நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(உ) அபிவிருத்தி லொத்தர் சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்தான நிதியத்தின் இலாபம், மீளாய்வாண்டு தொடர்பில் ரூபா 958,404,171 தொகையாகக் காணப்பட்டது. ஆனால், அந்த கூட்டுத்தொகை நிதிக்கூற்றுக்களில் ரூபா 896,255,500 தொகையொன்றாகக் காணப்படுவதால் ரூபா 62,148,671 இனால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) பேரேட்டுக் கணக்கின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான பாடசாலை அபிவிருத்தி நிதியத்தின் நிலையான வைப்பிலுள்ள மீதி ரூபா 643,248,361 தொகையாகக் காணப்பட்டது. அந்த தொகை நிதிநிலமைக்கூற்றில் ரூபா 322,248,361 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தமையினால், ரூபா 321,000,000 பெறுமதியினைக் காட்டுகின்றது.

### 2.2.4 விபரிக்கப்படாத வித்தியாசங்கள்

மகாபொல முதலீட்டு கலவை தொடர்பில் குறித்த கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் பிரகாரம் ரூபா 5,864,837,065 தொகையான மீளாய்வாண்டிற்கான மகாபொல முதலீட்டு கலவையின் மீதி நெசனல் வெல்த் கோப்பரேசனினால் முகாமை செய்யப்படுகின்றது. எவ்வாறாயினும், மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தினால்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலமைக்கூற்றின் பிரகாரம், குறித்த பெறுமதி ரூபா 5,860,541,686 தொகையாகக் காணப்பட்டமையினால், ரூபா 4,295,379 விபரிக்கப்படாத வித்தியாசமொன்றை சுட்டிக்காட்டுகின்றது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

04 பேரேட்டுக் கணக்குகளின் ஆரம்ப மீதிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில் தாக்கத்தினைச் செலுத்தியிருந்த முன்னைய ஆண்டின் மிகைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 640,854,313 தொகையான சரிப்படுத்தல்களுடன் தொடர்புடைய நாளேட்டுக் குறிப்புக்கள், கணக்காய்விற்குக் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிசார் விளைவுகளினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 682,470,162 மிகைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,079,677,832 மிகையொன்றாக காணப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 397,207,670 முன்னேற்றமொன்று சுட்டிக்காட்டப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 335,594,239 தொகையொன்றினால் வருமானம் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் நிதிசார் விளைவுகளினை பகுப்பாய்வு செய்கையில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தேறிய மிகையொன்றினை சுட்டிக்காட்டியது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு என்பவற்றை நிதிசார் விளைவுகளுக்கு சரிப்படுத்தும்பொழுது, ரூபா 688,827,839 தொகையாகக் காணப்பட்ட 2012 ஆம் ஆண்டின் பங்களிப்பு, மீளாய்வாண்டில் ரூபா 1,086,213,752 வரை முன்னேற்றமடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

### 4.1.1. திட்டமிடல்

2012 - 2015 காலப்பகுதிக்கு நம்பிக்கை நிதியத்தினால் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுடன் தொடர்புடைய நிதி மற்றும் அளவுசார் பெறுமதிகள், சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை. அவற்றின் அடிப்படையில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்காமையினால், செயலாற்றலினை பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

முதலீட்டின் மீதான வட்டி மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையினூடாக மீளாய்வாண்டில் நம்பிக்கை நிதியத்தினால் பெறப்பட்ட மொத்த வருமானம் ரூபா 1,677 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அவற்றிலிருந்து 37 சதவீதத்தினை சுட்டிக்காட்டுகின்ற ரூபா 620 மில்லியன் தொகையொன்று மாத்திரம் நம்பிக்கை நிதியத்தின் நோக்கமொன்றான 15,000

மகாபொல புலமைப்பரிசில்களினை அளிப்பதற்கு செலவிடப்பட்டிருந்தது. நம்பிக்கை நிதியத்தின் ஏனைய நோக்கங்களுக்கு மிகுதியினை பயன்படுத்துவதற்கு கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மிகை நிதிகள் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான மொத்த முதலீடுகளின் பெறுமதி ரூபா 1,065 மில்லியனாகக் காணப்பட்டது.

**4.2 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

பல்கலைக்கழகத்திற்கு உள்நுழைவதற்கான வாய்ப்புக்களை பெற்றிருக்காத மாணவர்களிற்குத் தகவல் தொழில்நுட்பத் துறையில் உயர் கல்வியை தொடருவதற்கான வழியினை வகுக்கும் நோக்கில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பின் கீழ் தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தை ஸ்தாபிப்பதற்காக 1998 யூலை 08 ஆந் திகதிய 98/995/11/052 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தை உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றாக ஸ்தாபிப்பதற்காகவும் நிலைமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் நிலைமாறல் காலப்பகுதியின் இறுதியில் மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு அதனை மாற்றுவதற்கும் உள்ளூர் மற்றும் சர்வதேச வாணிப அமைச்சில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, ‘‘இலங்கை’’ எனும் பதம் உள்ளடங்கலாக உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தை ஸ்தாபிப்பதற்கான பொறுப்பு மற்றும் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் தேவையான நிதிகளையும் அதற்கான வளப் பங்களிப்பையும் வழங்குதல் என்பன மஹபொல உயர்கல்வி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு உள்ளன.

(அ) 2003 மார்ச் 19 இல் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றான இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு சொந்தமான மாலபே பிரதேசத்தில் அமைந்துள்ள 25 ஏக்கர் காணியில் அமைந்துள்ள பல்கலைக்கழகம் 08 ஆண்டுகள் காலப்பகுதிக்கு முகாமைத்துவம் செய்வதற்காக கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ் உடன்படிக்கைக் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் 2005 நவம்பர் 14 இல் மீண்டும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் இலங்கை தகவல் தொழில்நுட்ப (உத்தரவாதத்தால்) வரையறுக்கப்பட்ட கம்பனியுடன் உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்ததுடன் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு சாதகமாக இருந்த ஆரம்ப உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் நிபந்தனைகள் புதிய உடன்படிக்கையில் நீக்கப்பட்டோ அல்லது திருத்தப்பட்டோ உள்ளது.

**நீக்கப்பட்ட நிபந்தனைகள்**

(i) 4(உ) பிரிவு - மகாபொல பல்கலைக்கழகத்தின் அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (எஸ்எல்ஐஐரீ) ஏனைய கிளைகளின் ஸ்தாபிப்பிற்கு அல்லது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நோக்கங்களுக்கு முரணாக ஏனைய வர்த்தக நோக்கங்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பயன்படுத்தப்படக்கூடாது.

(ii) 4(எ) பிரிவு - பல்கலைக்கழகத்தின் மேம்பாட்டிற்காக கருதும் அனைத்து தொழிற்பாடுகளும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் இணக்கப்பாட்டுடன் நிறைவேற்றப்படல் வேண்டும்.

(iii) 4(ஏ) - கல்விசார் பாடநெறிகளினை நடாத்துவதனூடாக வருமானத்தை சேகரித்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்திற்கு அவசியமான செலவினத்தை மேற்கொள்ளுதல் என்பன இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (எஸ்எல்ஐஐரீ) பொறுப்பொன்றாகக் காணப்படும்.

(iv) 4(கா) - நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தேசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (என்டீபீ) கணிசமான கடன் தொகையொன்றினை பெற்றுக்கொண்டது என்ற உண்மையினை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (எஸ்எல்ஐஐரீ) அறிந்திருக்க வேண்டியதுடன் அது சிறந்த நிதிசார் நம்பிக்கைத் தன்மையை பெற்றிருக்கும் போது தவணைப் பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு ஒவ்வொரு சாத்தியமான முயற்சியினையும் மேற்கொள்வதை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (எஸ்எல்ஐஐரீ) உறுதிப்படுத்துதல்.

(v) 4(கீ) - பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத்தினை பேணுதல் மற்றும் அதன் கணக்குகளினை மதிப்பீடு செய்து பரீட்சிப்பதற்கு தகுதிவாய்ந்த முகாமையாளர்கள் மற்றும் கணக்காய்வாளர்களை உள்ளடக்கிய சுதந்திரமான அமைப்பொன்றை நியமிப்பதற்கும் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்ககூடிய புதிய பாடநெறிகளினை மதிப்பிடுவதற்காக தகைமைவாய்ந்த தேர்ச்சிபெற்ற திறமையான தனிநபர்கள் குழுவொன்றை நியமிப்பதற்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உரிமையைக் கொண்டிருத்தல்.

(vi) 4(கெ) பிரிவு - நம்பிக்கைப் பொறுப்பாளரின் தீர்மானத்தினைத் தொடர்ந்து மாலபே பல்கலைக்கழகம் ''மஹபொல கம்பஸ்'' என பெயரிடப்படுதல் கேட்போர்கூடம் ''லலித் அதுலத்முதலி கேட்போர்கூடம்'' என பெயரிடப்படுதல் மற்றும் தொடர்புடைய பெயர்ப் பலகைகள் வளாகத்தில் தெளிவாக காட்சிப்படுத்தப்படுதல்

(vii) 4(ச) - செல்லுபடியாகும் காலப்பகுதி முடிவடைதல் காரணமாக அல்லது வேறு வழியில் இவ் உடன்படிக்கை முடிவுறுத்தப்படும் போது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் நிதியிடப்பட்ட சொத்துக்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஆதனங்களாக காணப்பட வேண்டும்.

**திருத்தப்பட்ட நிபந்தனைகள்**

------------------------------------------------------------------

(i) 2003 மார்ச் 19 ஆந் திகதிய சட்டரீதியான உடன்படிக்கையின் 4(க) பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளான ''இணங்கப்பட்டிருந்த முகாமைத்துவக் கட்டணத்தை கழித்ததன் பின்னர் பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள் ஊடாக உருவாக்கப்பட்ட வருமான மிகை அடுத்துவரும் ஆண்டின் யூன் 30 இற்கு முன்னர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும் என்பதும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் முன் அங்கீகாரமின்றி ஏனைய முதலீடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட முடியாது என்பதும் எவ்வாறாயினும், பல்கலைக்கழகத்தின் எதிர்கால அபிவிருத்திக்காக ஒதுக்கீட்டுக் கணக்கொன்றை பேணுவதற்காக இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (எஸ்எல்ஐஐரீ) பணிப்பாளர் சபையினால் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் அனுமதி கோரப்பட முடியும் என்பதும் அத்துடன் அவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளிற்கு தேவையான பணம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் இவ் ஒதுக்கக் கணக்கிலிருந்து வழங்கப்பட முடியும் என்பதும்'' என்பவற்றிற்கு பதிலாக நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் சொந்தமான காணி குத்தகை அடிப்படையில் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு (எஸ்எல்ஐஐரீ) வழங்கப்படும் வகையில் புதிய உடன்படிக்கை ஊடாக திருத்தம் செய்யப்பட்டு உடன்படிக்கையின்

5(அ)(i) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த குத்தகையாக ரூபா 8 மில்லியன் அல்லது இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் (எஸ்எல்ஐஐரீ) வருடாந்த தேறியலாபத்தில் 20 சதவீதமான பெறுமதி இரண்டிலும் ஆகக்கூடிய பெறுமதி செலுத்தப்பட வேண்டும் என இணங்கப்பட்டது.

(ii) நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் என்பவற்றுக்கிடையே 2003 மார்ச் 19 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் 4(க) பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகள் மீது பரிந்துரைப்பதற்கான அதிகாரம் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழகத்தின் மேம்பாடு தொடர்பான அனைத்து அளவீடுகளும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஒத்துழைப்பின் கீழ் எடுக்கப்பட வேண்டும். எனினும், புதிய உடன்படிக்கையின் 4(உ) மற்றும் (ஊ) பிரிவுகளின் பிரகாரம் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவக நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அதன் பணிப்பாளர் சபையால் எடுக்கப்பட்ட தீர்மானங்களிற்கிணங்க பல்கலைக்கழக செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், அதற்கு இணங்க சுற்றறிக்கைகளை தயாரித்தல், பரீட்சைகளிற்கான தயார்படுத்தல், மாணவர்களை சேர்த்துக் கொள்ளுதல், கல்விசார் பதவியணியினரின் தொழில் மற்றும் உட்கட்டமைப்புக்களின் முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அதேநேரம் பிரதான நிர்மாணங்கள் மாத்திரம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கு இணங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், வரைபு ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்கள் காலப்பகுதியொன்றுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 யூலை 17 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 133 ஆம் நிதிப்பிரமாணம், மற்றும் 2009 யூன் 09 ஆந் திகதிய, டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் நம்பிக்கை நிதியத்திற்கான உள்ளகக் கணக்காய்வு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலகினால்கூட உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நம்பிக்கை நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) முதலீடுகளின் முகாமைத்துவம் | முறையான அங்கீகாரமின்றி முதலீடுகளினை முகாமை செய்தல் மற்றும் முதலீட்டு நலன்களினை மதிப்பிடுவதற்கு தவறியமை. |
| (ஆ) உள்ளகக் கட்டுப்பாடு | கணக்காளர் பதவி காணப்படாமை. செலுத்துகைகளின் பரிந்துரைகள் மற்றும் அங்கீகாரம் பணிப்பாளரினால் தாமாகவே செய்யப்படுகின்றமை. கணக்கீடு மற்றும் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளின் பேணுகை பலவீனமாக தொடர்ந்தும் காணப்படுகின்றமை. |